Cambridge International A Level

**Cambridge Assessment International Education**
Cambridge International Advanced Level

**TAMIL** **9689/41**

Paper 4 Texts **October/November 2019**

**2 hours 30 minutes**

No Additional Materials are required.

*3029669893*

**READ THESE INSTRUCTIONS FIRST**

An answer booklet is provided inside this question paper. You should follow the instructions on the front cover of the answer booklet. If you need additional answer paper ask the invigilator for a continuation booklet.

Answer **three** questions, each on a different text. You must choose **one** question from Section 1, **one** question from Section 2 and **one other**.
Write your answers in **Tamil**.
Dictionaries are **not** permitted.
You may **not** take set texts into the examination.

You should write between 500 and 600 words for each answer.
All questions in this paper carry equal marks.

**முதலில் என்ன செய்ய வேண்டும் என்பதைப் படிக்கவும்**

கேள்வித்தாளுடன் விடைகள் எழுதுவதற்கு ஒரு புத்தகம் கொடுக்கப்படும். அதில் முன்பக்கத்தில் என்ன செய்ய வேண்டும் என்று எழுதி இருப்பதைப் பார்த்து அதன்படி செய்யவும். விடைகள் எழுதுவதற்காக கொடுக்கப்பட்ட புத்தகத்தை நிரப்புவது பற்றிய கட்டளைகள் தமிழில் வேண்டுமானால் இந்தக் கேள்வித் தாளின் இரண்டாவது பக்கத்தில் காண்க. மேலும் உங்களுக்கு விடை எழுதுவதற்குப் பேப்பர் தேவையாக இருந்தால் மேற்பார்வையாளரிடம் கேட்கவும்.

ஏதாவது மூன்று கேள்விகளுக்கு, வேறு வேறு பாடப் பகுதிகளிலிருந்து கேள்விகள் எடுத்து விடைகளை எழுதவும். முதல் பகுதியில் இருந்து ஒரு கேள்வியும், இரண்டாவது பகுதியில் இருந்து ஒரு கேள்வியும் பகுதி ஒன்று அல்லது இரண்டில் இருந்து மூன்றாவது கேள்வியும் எடுத்து விடைகள் எழுதவும்.
விடைகளைத் **தமிழில்** எழுதவும்.
அகராதிகளைப் பயன்படுத்தக் கூடாது.
பாடப் புத்தகங்களைத் தேர்வு எழுதும் இடத்துக்குக் கொண்டுபோகக்கூடாது.

நீங்கள் ஒவ்வொரு விடையையும் 500 முதல் 600 சொற்களுக்கு இடையில் எழுத வேண்டும்.
எல்லா விடைகளுக்கும் சமமான மதிப்பெண்கள் கொடுக்கப்படும்.

விடைகள் எழுதுவதற்காக கொடுக்கப்பட்ட புத்தகத்தை நிரப்புவது பற்றிய கட்டளைகள் தமிழில் வேண்டுமானால் இந்தக் கேள்வித் தாளின் இரண்டாவது பக்கத்தில் காண்க.

This document consists of **6** printed pages, **2** blank pages and **1** Insert.

KI 173938/3
© UCLES 2019


Cambridge Assessment International Education

**[Turn over**

https://xtremepape.rs/

**விடைகள் எழுதும் புத்தகத்தில் செய்ய வேண்டியவை**

விடைகள் எழுதும் புத்தகத்தின் முன் பக்கத்தில் எல்லாப் பெட்டிகளிலும் எழுதவும்.
கருநீலம் அல்லது கருப்புப் பேனாவால் எழுதவும். எந்த பார்க்கோட்டிலும் எழுதவேண்டாம்.
விடைகளை விடைகள் எழுதும் புத்தகத்தில் எழுதவும். பேப்பரின் இரண்டு பக்கமும் எழுதவும்.
ஒவ்வொரு கேள்வியின் விடைகளுக்கும் இடையில் இரண்டு இடங்கள் விடவும்.
நீ விடை அளிக்கும் கேள்வியின் நம்பரை முதல் மார்ஜினில் எழுதவும்.




நீ எழுதும் கேள்வி பகுதிகளாக இருந்தால் உதாரணமாக 1a, கேள்வியின் பகுதியை இரண்டாவது மார்ஜினில் எழுதவும். இரண்டாவது விடை எழுதும் புத்தகம் வாங்கி விடை எழுதி இருந்தால் அதையும் முதல் புத்தகத்துடன் சேர்த்து வைக்கவும்.

© UCLES 2019


https://xtremepape.rs/

BLANK PAGE

© UCLES 2019 

https://xtremepape.rs/

ஏதாவது **மூன்று** கேள்விகளுக்கு, வேறு வேறு பாடப் பகுதிகளிலிருந்து கேள்விகள் எடுத்து விடைகளை எழுதவும். முதல் பகுதியில் இருந்து ஒரு கேள்வியும், இரண்டாவது பகுதியில் இருந்து ஒரு கேள்வியும் பகுதி ஒன்று அல்லது இரண்டில் இருந்து மூன்றாவது கேள்வியும் எடுத்து விடைகள் எழுதவும்.

**பகுதி 1**

**1 ஏதாவது ஒரு வினாவிற்கு ((a) அல்லது (b)) விடை தரவும்.**

**(a)** <u>புறநானூறு</u>

யாதும் ஊரே; யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா;
நோதலும் தணிதலும் அவற்றோரன்ன;
சாதலும் புதுவது அன்றே; வாழ்தல்
இனிது என மகிழ்ந்தன்றும் இலமே; முனிவின்,
இன்னாது என்றலும் இலமே; 'மின்னொடு
வானம் தண் துளி தலைஇ, ஆனாது
கல் பொருது இரங்கும் மல்லல் பேர் யாற்று
நீர்வழிப்படூஉம் புணைபோல் ஆர் உயிர்
முறை வழிப்படூஉம்' என்பது திறவோர்
காட்சியின் தெளிந்தனம் ஆகலின், மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே;
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே.
--கணியன் பூங்குன்றன் பாட்டு, 192

**(i)** மேற்கூறிய பாடலில் கேளிர், திறவோர் ஆகிய சொற்களின் பொருள் என்ன?

**(ii)** 'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்று கூறும் கணியன் பூங்குன்றன் வாழ்க்கையில் வேறு என்ன உண்மைகளைக் கண்டறிந்தார்? [25]

**அல்லது**

**(b) சிலப்பதிகாரம், இளங்கோ அடிகள்**

'கொலைக்களப்பட்ட கோவலன் மனைவி; கண்ணகி என்பது என் பெயரே' என்று தன்னை அறிமுகப்படுத்திக்கொள்ளும் கண்ணகி வழக்குரைத்த பாங்கினை விளக்கி எழுதுக? [25]

© UCLES 2019


https://xtremepape.rs/

**2 திருக்குறள்**

**ஏதாவது ஒரு வினாவிற்கு ((a) அல்லது (b)) விடை தரவும்.**

**(a)** வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று

ஒன்றெய்தி நூறிழக்கும் சூதர்க்கும் உண்டாங்கொல்
நன்றெய்தி வாழ்வதோர் ஆறு

உருளாயம் ஓவாது கூறின் பொருளாயம்
போஒய்ப் புறமே படும்

சிறுமை பலசெய்து சீரழிக்கும் சூதின்
வறுமை தருவதொன்று இல்

கவறும் கழகமும் கையும் தருக்கி
இவரறியார் இல்லாகி யார்

**(i)** ஆறு, கழகம் என்னும் சொற்களின் பொருள் என்ன?

**(ii)** மேலே கண்ட ஐந்து குறள்களிலும் ஏனைய ஐந்து குறள்களிலும் சூதாட்டத்தின் தீமைகளை வள்ளுவர் எப்படி விளக்குகிறார்? [25]

**அல்லது**

**(b)** ஊக்கம் உடைமை என்னும் அதிகாரத்தில் அதன் அவசியத்தை வள்ளுவர் எவ்வாறெல்லாம் வலியுறுத்துகிறார்? [25]



https://xtremepape.rs/

**3** **தேவாரம் - அப்பர்**

**ஏதாவது ஒரு வினாவிற்கு ((a) அல்லது (b)) விடை தரவும்.**

**(a)** பொன்போல மிளிர்வதொர் மேனியினீர்
புரிபுன்சடை யீர்மெலியும் பிறையீர்
துன்பே கவ லைபிணி என்றுஇவற்றை
நணுகாமல் துரந்து கரந்தும்இடீர்
என்போலிகள் உம்மை இனித் தெளியார்
அடியார் படுவது இதுவேயாகில்
அன்பே அமையும்அதி கைக்கெடில
வீரட்டானத் துறை அம்மானே

'பொன்போல மிளிர்வதொர் மேனி' என்று சிவபெருமானை வருணிக்கும் அப்பர் பெருமான் பதிகத்தின் பத்து பாடல்களில் சிவனை வருணிக்கும் அழகினை எடுத்துக்காட்டுகளுடன் தரவும். [25]

**அல்லது**

**(b)** எந்த சூழ்நிலையில் அப்பர் பெருமான் வீரட்டானத்துறை இறைவனைப் போற்றிப் பதிகம் பாடினார்? என்ன வேண்டினார்? [25]



https://xtremepape.rs/

## பகுதி 2

**4 இக்காலக் கவிதைகள்**

**ஏதாவது ஒரு வினாவிற்கு ((a) அல்லது (b)) விடை தரவும்.**

**(a) பாரதியார்**
'கண்ணன் என் தாய்' என்னும் கவிதையில் கண்ணனைத் தாயாக வருணிக்கும் பாரதியார், அவளிடமிருந்து என்ன என்ன கிடைத்ததாகச் சொல்லி மகிழ்கிறார்? [25]

**அல்லது**

**(b) பாரதிதாசன்**
எது கலை என்னும் கவிதையில், கலை என்பது என்ன என்று கவிஞர் பாரதிதாசன் விளக்குகிறார்? [25]

**5 நாவல், பால்மரக் காட்டினிலே, அகிலன்**

**ஏதாவது ஒரு வினாவிற்கு ((a) அல்லது (b)) விடை தரவும்.**

**(a)** பால்மரக் காட்டினிலே நாவலில் உனக்குப் பிடித்த கதாபாத்திரம் யார்? ஏன்? [25]

**அல்லது**

**(b)** பால்மரக் காட்டினிலே நாவலில் வரும் பெண்களின் பங்கு பணி என்ன என்பதை விளக்கி கட்டுரை எழுதவும். [25]

**6 நவீன தமிழ்ச் சிறுகதைகள்**

**ஏதாவது ஒரு வினாவிற்கு ((a) அல்லது (b)) விடை தரவும்.**

**(a)** சிறுகதை எழுதுவதில் அகிலன் சிறந்தவர் என்பதை ஏற்கிறீர்களா? உங்கள் கருத்துக்கு 'தாய்ப்பசு' கதையில் என்ன சான்றுகள் உள்ளன? [25]

**அல்லது**

**(b)** அறிஞர் அண்ணாவின் தமிழ் நடை, அவரது 'செவ்வாழை' என்னும் கதையில் எப்படி உள்ளது என்பதை எடுத்துக்காட்டுகளோடு விளக்கவும்? [25]



https://xtremepape.rs/

**BLANK PAGE**

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

To avoid the issue of disclosure of answer-related information to candidates, all copyright acknowledgements are reproduced online in the Cambridge Assessment International Education Copyright Acknowledgements Booklet. This is produced for each series of examinations and is freely available to download at www.cambridgeinternational.org after the live examination series.

Cambridge Assessment International Education is part of the Cambridge Assessment Group. Cambridge Assessment is the brand name of the University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which itself is a department of the University of Cambridge.



https://xtremepape.rs/